முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 76/2024

அரசுதரப்பு 3 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சின்னப்பன் | வயது | : | 74 |
| தந்தை/கணவர் பெயர் | : | செல்வராயர் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 25.11.2025ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது வானமாதேவி, மணவெளியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்தேன், தற்போது எந்த வேலையும் செய்யவில்லை. 8 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். 2018 ஆம் ஆண்டு என்னிடம் போலிசார் கையெழுத்து வாங்கினார்கள். போலிசார் ஊருக்கு வந்து விசாரித்து போனார்கள் என்றும் காவல் நிலையத்தில் கேட்பார்கள் என்றும் சொன்னார்கள். அதனால் நான் சாட்சி கையொப்பம் போட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் வெள்ளை தாளில் தான் கையொப்பம் வாங்கினார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருத அரசுதரப்பில் அனுமதி கேட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

கடந்த 16.07.2018 அன்று 9.45 மணிக்கு சோழதரம் காவல் நிலைய குற்ற எண் 148/2018 வழக்கில் போலிசார் சம்பவ இடமான மணவெளி வீராணம் ஏரிக்கரை அருகில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் வரைந்த போது நானும் ஏசுராஜ் என்பவரும் சாட்சிகளாக இருந்து சாட்சி கையொப்பம் செய்ததாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 76/2024

அரசுதரப்பு 4 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஏசுராஜ் | வயது | : | 47 |
| தந்தை/கணவர் பெயர் | : | அகஸ்டியன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 25.11.2025ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது வானமாதேவி, மணவெளியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். 7 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். 2018 ஆம் வருடம் மாலை 6.00 மணியளவில் ஆட்டுக்கு தழை வெட்டுவதற்காக சென்ற போது அ.சா.3 சின்னப்பன் வீட்டிற்கு வெளியே போலிசார் அங்கு இருந்தார்கள். போலிசார் ஊருக்கு வந்து விசாரித்து போனார்கள் என்றும் காவல் நிலையத்தில் கேட்பார்கள் என்றும் சொன்னார்கள். அதனால் நான் சாட்சி கையொப்பம் போட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 ஆவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருத அரசுதரப்பில் அனுமதி கேட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

கடந்த 16.07.2018 அன்று 9.45 மணிக்கு சோழதரம் காவல் நிலைய குற்ற எண் 148/2018 வழக்கில் போலிசார் சம்பவ இடமான மணவெளி வீராணம் ஏரிக்கரை அருகில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் வரைந்த போது நானும் சின்னப்பன் என்பவரும் சாட்சிகளாக இருந்து சாட்சி கையொப்பம் செய்ததாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.